செ.வெ.எண்: 590 நாள்: 12.10.2021

# ஊரக உள்ளாட்சி தற்செயல் தேர்தல்கள் 2021
## பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக இருந்த பதவியிடங்களுக்கு 09.10.2021 அன்று நடைபெற்ற தற்செயல் தேர்தலில் பதிவான வாக்குகள் 12.10.2021 அன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற மாவட்ட ஊராட்சி வார்டு எண். 9-க்கான தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் திரு.கை.பழனிச்சாமி என்பவர் 22645 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவருக்கு அடுத்தபடியாக வந்த அஇஅதிமுக வேட்பாளர் திருமதி.பா.அழகுசுந்தரி என்பவரை விட 12934 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அஇஅதிமுக வேட்பாளர் திருமதி.பா.அழகுசுந்தரி 9711 வாக்குகள் பெற்றார். திருமயம் ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு எண்.5-க்கான உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் திரு.கா.சுப்பிரமணியன் என்பவர் 2015 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவருக்கு அடுத்தபடியாக வந்த அஇஅதிமுக வேட்பாளர் திரு.பொன்.பன்னீர்செல்வம் என்பவரை விட 655 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அஇஅதிமுக வேட்பாளர் திரு.பொன்.பன்னீர்செல்வம் 1360 வாக்குகள் பெற்றார். இத்தேர்தலில் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் திருமதி.ச.அர்ச்சணாதேவி என்பவர் 47 வாக்குகள் பெற்றார்.

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், அரசமலை கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட திரு.ரா.பழனிவேல் என்பவர் 1144 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். மறவாமதுரை கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட திரு.அ.அடைக்கன் என்பவர் 1542 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கீழப்பனையூர் கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட திரு.ரா.பழனியப்பன் என்பவர் 544 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு கிராம ஊராட்சித் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட திருமதி.செ.ஜானகி என்பவர் 1499 வாக்குகள் பெற்று, தனக்கு அடுத்தபடியாக வந்த திருமதி.து.தீபா என்பவரை விட 48 வாக்குகள் அதிகம் பெற்று மாங்காடு ஊராட்சி மன்றத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தாந்தாணி கிராம ஊராட்சி வார்டு எண்.6-க்கான உறுப்பினர் தேர்தலில் திரு.மா.இளையராஜா என்பவரும், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், நல்லம்பாள்சமுத்திரம் கிராம ஊராட்சி வார்டு எண்.2-க்கான உறுப்பினர் தேர்தலில் திரு.ச.முத்தையா என்பவரும், திருவாக்குடி கிராம ஊராட்சி வார்டு எண்.5-க்கான உறுப்பினர் தேர்தலில் திருமதி.ம.வசந்தி என்பவரும், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், ஆர்.பாலக்குறிச்சி கிராம ஊராட்சி வார்டு

எண்.7-க்கான உறுப்பினர் தேர்தலில் திரு.சி.மாணிக்கம் என்பவரும், திருமயம் ஊராட்சி ஒன்றியம், நெய்வாசல் கிராம ஊராட்சி வார்டு எண்.9-க்கான உறுப்பினர் தேர்தலில் திரு.பெரி.மதன் என்பவரும், பி.அழகாபுரி கிராம ஊராட்சி வார்டு எண்.4-க்கான உறுப்பினர் தேர்தலில் திரு.சித.ராஜேந்திரன் என்பவரும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், குலமங்களம் தெற்கு கிராம ஊராட்சி வார்டு எண்.9-க்கான உறுப்பினர் தேர்தலில் திருமதி.ரெ.விஜயா என்பவரும், வேங்கிடகுளம் கிராம ஊராட்சி வார்டு எண்-7-க்கான உறுப்பினர் தேர்தலில் திரு.நா.செல்வம் என்பவரும் வெற்றி பெற்று கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவை தவிர பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், கீழத்தானியம் கிராம ஊராட்சித்தலைவர் பதவியிடத்திற்கு திரு.த.நல்லையா என்பவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதுபோல புதுக்கோட்டை மாவட்டத்தில் 12 ஊராட்சி ஒன்றியங்களில் 33 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு போட்டியிட்ட வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் எதிர்வரும் 20.10.2021 அன்று பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.